DINAMANI

30 JULY 2022

PAGE 8

# புதுவை பல்கலை.யில் வனப் பாதுகாப்பு கருத்தரங்கு

**புதுச்சேரி, ஜூலை 29:** புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் வனம், வனச் சட்டம் என்ற தலைப்பிலான கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

துணைவேந்தர் குர்மீத்சிங் தலைமை வகித்துப் பேசினார். புதுவை துணை வனப் பாதுகாவலர் வஞ்சுளவள்ளி கருத்தரங்கை தொடக்கிவைத்துப் பேசினார். பல்கலை. சட்டப் பள்ளி முதல்வர் ஏ.செல்லப்பெருமாள், சுற்றுச்சூழல் அறிவியல் துறை பேராசிரியர்கள் டி.ராமமூர்த்தி, கே.சிவக்குமார், பசுமை வளாக ஒருங்கிணைப்பாளர் எம்.நந்திவர்மன் ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர்.

தோப்புகள், சமூக காடுகள், பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் வனப் பாதுகாப்பு, சமூக காடுகள், வனவிலங்கு பாதுகாப்பு, பசுமையான புதுச்சேரி, வனவிலங்கு முக்கியத்துவம் மற்றும் வனம் தொடர்பான குற்றச் செயல்கள் ஆகிய தலைப்புகளில் தொழில்நுட்ப அமர்வுகள் மூலம் விவாதித்தனர். கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

DINAMALAR

30 JULY 2022

PAGE 4

# வன மகோற்சவ மாதம் சிறப்பு கருத்தரங்கம்

புதுச்சேரி, ஜூலை 30–

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் ஒரு நாள் சிறப்பு கருத்தரங்கம் நடந்தது.

வன மகோற்சவ மாதத்தை முன்னிட்டு, புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் சட்டப் பள்ளி, சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் துறை, பசுமை வளாக அலுவலகம் சார்பில் 'காடு, மக்கள் மற்றும் சட்டம்' என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் நடந்தது.

கருத்தரங்கத்தை துவக்கி வைத்து துணைவேந்தர் குர்மீத் சிங் சிறப்புரையாற்றினார்.

துணைவேந்தர் குர்மீத் சிங் பேசும்போது, 'தாவரங்கள் மற்றும் மரங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவதன் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிக்க முடியும்' என்று குறிப்பிட்டார்.

கருத்தரங்கத்தில் துணை வனப் பாதுகாவலர் வஞ்சுலவள்ளி, சட்டப் பள்ளி புல முதன்மையர் செல்லப்பெருமாள், சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் துறைத் தலைவர் ராமமூர்த்தி, பசுமை வளாக ஒருங்கிணைப்பாளர் நந்திவர்மன், சூழலியல் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் பேராசிரியர் சிவக்குமார் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

துவக்க விழாவை தொடர்ந்து, புனித தோப்புகள், சமூக காடுகள், பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் வனப் பாதுகாப்பு, சமூக காடுகள், வனவிலங்கு பாதுகாப்பு, பசுமையான புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் தொழில்நுட்ப அமர்வுகள் நடந்தது.

ஆய்வாளர்கள் தங்களது கட்டுரைகளை சமர்பித்தனர். தொடர்ந்து விவாதம் நடந்தது.

கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன.




■ வன மகோற்சவ மாதத்தை முன்னிட்டு, புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமையில் சிறப்பு கருத்தரங்கம் நடந்தது. அருகில், துணை வனப் பாதுகாவலர் வஞ்சுலவள்ளி.

DINAKARAN

30 JULY 2022

PAGE 5

**PONDICHERRY UNIVERSITY**
**(A Central University)**
Kalapet, Puducherry-605 014.

**Ref: PU/Aca-6/GMI/2021-22/** **Date: 27.07.2022**

## TENDER NOTICE

Sealed quotations are invited from Insurance Companies for student Group Insurance Policy with Mediclaim, Life and personal accident insurance (Package Policy) as per laid down criteria.

The last date for receipt of quotation is **17.08.2022upto 3.00 pm.** Full details and tender document are available in the University website www.pondiuni.edu.in which may be downloaded and submitted.

**REGISTRAR(i/c)**

DINAKARAN

30 JULY 2022

PAGE 5

# PONDICHERRY UNIVERSITY

पांडिचेरी विश्वविद्यालय புதுவைப் பல்கலைக்கழகம்

(A Central University)

DR.B.R.AMBEDKAR ADMINISTRATIVE BUILDING

R.V. NAGAR, KALAPET, PUDUCHERRY – 605014

RECRUITMENT CELL

Advt No: PU/RC/2022-23/40 Dated: 28.07.2022

## RECRUITMENT OF CONTRACT FACULTY UNDER DACE – UPSC - COACHING

Online applications are invited from eligible, highly qualified, dedicated and academically productive candidates who have strong commitment towards UPSC-CivilServices coaching with an innovative teaching, research and be responsible for result oriented training with the following specialization on contract basis:

*** Public Administration * Psychology * Sociology**

For further details of the qualifications, instructions, Terms and conditions, visit the University website: recruitment.pondiuni.edu.in.

* The last date for submission of online application is 17.08.2022 05.00 pm IST

* Hard copy of application to be received on or before 22.08.2022

Date: 28.07.2022

**REGISTRAR(i/c)**